Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# திருவண்ணாமலை கோயில் பிச்சாடனர் சிற்பங்கள்

20

**முனைவர் ச.வைத்தீஸ்வரன்,**
**உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, கலைஞர் கருணாநிதி அரசு கலைக்கல்லூரி,**
**திருவண்ணாமலை – 606 603.**
**E-Mail – sveswaran45@gmail.com**

**முன்னுரை / ஆய்வுநோக்கம்**

பஞ்சபூ தலங்களில் அக்னித் தலமாக விளங்குவது திருவண்ணாமலை. இங்குள்ள இறைவன் பெயர் அண்ணாமலையார். இறைவி பெயர் உண்ணாமுலை அம்மன். தெய்வத்தன்மையைக் குறிக்கும் "திரு" என்பது முன்னொட்டாக அமைந்து அண்ணாமலை என்ற இறைவனைக் குறிக்கும் பெயருடன் சேர்ந்து திருவண்ணாமலை என்று நகரின் பெயராக அமைந்துள்ளது. இங்கு இறைவன் மலையுருவில் நின்று பக்தர்களின் வேண்டுதல்களை நிறைவேற்றி வருகிறார். அதனால்தான் ஒவ்வொரு பௌர்ணமியன்றும் மக்கள் கிரிவலம் வருவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். சிவனின் ஆதிமூர்த்தமாகக் கருதப்படுவது இலிங்கோத்பவ மூர்த்தமாகும். சிவனுக்கு முக்கியமாக இருபத்தைந்து மூர்த்தங்களைச் சைவர்கள் குறிப்பர். சிலர் அறுபத்து நான்கு மூர்த்தங்கள் இருப்பதாகக் கூறுவர். இம்மூர்த்தங்களுள் "பிச்சாடனர்" மூர்த்தமும் குறிப்பிடத்தகுந்ததாகும். இம்மூர்த்தம் திருவண்ணாமலை கோயில் கோபுரம் மற்றும் மண்டபங்களில் ஆங்காங்கே அமைந்துள்ளது. இம்மூர்த்தம் அமைந்துள்ள இடங்கள் மற்றும் அதன் சிறப்பினை வெளிப்படுத்துவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**ஆய்வுச்சுருக்கம்**

இறையருளிலும் கலையழகிலும் இயற்கைச் சூழலிலும் இணையற்று திருவண்ணாமலையில் அமைந்துள்ளது அண்ணாமலையார் திருக்கோயில். பல்லவர் காலம் முதல் விசயநகர காலம் வரையிலான கட்டடக்கலை மற்றும் சிற்பங்களைத் தன்னகத்தே கொண்டு இக்கோயிலைக் காணவருபவர்களுக்குக் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கிறது.

முற்காலச் சோழர் கோயில்களில் விமானச்சிற்பங்களிலும் பிற்காலச் சோழர் கோயில்களில் தேவகோட்டங்களிலும் பிச்சாடனர் சிற்பங்கள் பெருமளவில் காணப்படுகின்றன. விசயநகரப் பேரரசர்கள் காலத்தில் கோயில் கோபுரங்கள், மண்டபத்தூண்கள், நூற்றுக்கால் மற்றும் ஆயிரங்கால் மண்டபங்களில் முழுவடிவ (அ) புடைப்புச் சிற்பங்களாக பிச்சாடனர் சிற்பங்கள் அமைந்துள்ளன. கோயில் கோபுரங்களில் இது சுதைச்சிற்பமாகக் காணப்படுகிறது. தன்னை வழிபடும் அடியார்களுக்கு அருளும் பிச்சாடனரின் சிறப்பை இக்கட்டுரை விளக்குகிறது.

**திறவுச் சொற்கள்**

தாருகாவனம் – பிச்சாடனர் – தத்துவங்கள் – சிறப்புகள் – பெருமைகள்.

**பிச்சாடனர்**

சைவமரபில் முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான் அருவம், உருவம் அருவுருவமாக வழிபடப்படுகிறார். நோக்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்து விளங்கும் அப்பெருமான்

ஆன்மாக்களுடைய ஈடேற்றத்திற்காக பல அருளுருவத் திருமேனிகளுடன் காட்சிதருகிறார். அவர் கலையாகவும் கலைஞானமாகவும் விளங்குகிறார். இத்திருமேனிகளுள் ஒன்றாக பிச்சாடனர் திருவுருவம் உள்ளது. எல்லாம் வல்லவரும் அனைத்துச் செல்வங்களையும் உள்ளடக்கி அருள்பவருமான இறைவன் பிச்சாடனராக (பிட்சை ஏற்று அங்குமிங்கும் திரிபவர்) விளங்கிய திருக்கோலம் இதுவாகும். இவர் பிட்சைத்தேவர், பிச்சை உவக்கும் பெருமான் எனவும் அழைக்கப்படுகின்றார்.

காரணாகமத்தின்படி மூன்றுகண்களும் நான்கு கரங்களும் அமைதி தவழும் முகமும் செம்பட்டை மயிரும் நன்கு திரண்ட உடற்கட்டும் நிறைந்த தோற்றத்துடன் பிச்சாடனர் தோற்றமளிப்பார். காதில் குண்டலங்கள் விளங்கும். பாம்பு பூணூலாக அமையும். பாம்பையே அரைஞாணாகவும் இவர் அணிந்து நிற்பார். கால்களில் காலணிகள் உண்டு. ஒருகையில் உடுக்கையும் மற்றதில் புல்லும் கூலமும் கபாலமும் விளங்கும். கையில் ஏந்தி நிற்கும் புல்லை வாயாற் பெரும் நிலையில் மான் தலையை உயர்த்தி காணப்படும்.

பொதுவாக இடக்கால் தரையில் ஊன்றியிருக்கும். வலக்கால் நடப்பதற்கு அடையாளமாகச் சற்று வளைந்து தளர்ந்திருக்கும். தலையில் ஜடாபாரம் காணப்படும். நெற்றியில் பட்டம் திகழும். ”திரிநேத்திரம், திருநீலகண்டம் முதலிய சிறப்பியல்புகள் இத்திருவுருவத்திற்கும் உண்டு. மார்பில் பூணூல் ஒளிரும். வலக்காலில் வீரக்கழல் மிளிரும். திருவடிகளை வேதப்பாதுகைகள் தாங்கி நிற்கும். கபாலம் ஏந்திய கை உந்தி வரை உயர்ந்திருக்கும். தமருகம் ஏந்திய வலக்கை காது வரை சென்றொளிரும். இந்நிலையில் காதுக்கும் வலக்கையின் முன்னங்கைக்கும் 16 அங்குலம் தொலைவு இடைவெளி இருத்தல் வேண்டும்” என்று சிற்ப நூல்கள் கூறுகின்றன[1].

**தாருகாவனமும் பிச்சாடனரும்**

முன்னொரு காலத்தில் தாருகாவனத்தில் மீமாம்சக மதத்தினரான இருடிகள் வேள்வியை மட்டுமே கதியாகக் கொண்டு பரமனை மதிக்கத் தவறினர். அவர்களின் இறுமாப்பை அடக்க இறைவன் பிச்சாடனர் கோலம் ஏற்றார். முனிவர்கள், தாங்கள் தவவலிமையில் ஈடுஇணையற்றவர்கள் என்ற ஆணவத்துடனும், முனிபத்தினிகள் மட்டுமே கற்பில் சிறந்தவர்கள் என்ற கர்வத்துடனும் இருந்தனர். முனிவர்களின் ஆணவம், கர்வத்தை அடக்கிட, திருமாலை அழகிய மோகினி வடிவம் எடுக்க வைத்து தம்முடன் வரப்பணித்தார் சிவன். அழகெல்லாம் ஒருங்கே திரண்டவராகப் பிச்சாடனர் மூர்த்தியாக திருவுருவம் தாங்கினார். இருவருமாகத் தாருகாவனம் சென்று முனிவர்களுக்கு அங்கிருந்த மோகினியும் முனிபத்தினிகளுக்குச் சிவபெருமானும் மையல் ஊட்டினர். முனிபத்தினிகள் சிந்தையழிந்து பிச்சாடனர்பின் சென்றனர். முனிவர்கள் மெய்மறந்து மோகினியின் பின்னால் சென்றனர். முனிபத்தினிகள் தங்களை விட்டுச் செல்வதைக் கண்ட முனிவர்கள் கோபமடைந்து வேள்வி செய்தனர். அவ்வேள்வியிலிருந்து எழும் பாம்பு, புலி, மான், யானை முதலியவற்றை இறைவன் மீது ஏவினர். இவற்றையெல்லாம் சிவன் தன் படைக்கருவிகளாகவும் அணிகலன்களாகவும் மாற்றிக்கொண்டார். பின்னர் மெய்யுணர்வினை முனிவர்களுக்கு நல்கி ஆட்கொண்டார் என்பது லிங்கபுராணம் விளக்குகிறது[2].

கூர்மபுராணத்தில் பிட்சாடனரைப் பற்றி மற்றொரு குறிப்பு கூறப்படுகிறது. பிரம்மன் இப்பிரபஞ்சத்தைப் படைத்தது தாம் என்று நினைத்து செருக்குற்றிருந்தார். பிரம்மனின் முன் லிங்கோத்பவராக ருத்ரன் தோன்றினார். வேதங்களும் ரிஷிகளும் ஏற்றநிலையில் பிரம்மன் மறுத்தார். பிரம்மனின் ஆணவத்தை அடக்க நினைத்த சிவன் பிரம்மனின் ஐந்தாவது தலையைக் கொய்தார். அதனால் ஏற்பட்ட தோசத்தைப் போக்குவதற்கு சிவன் காசி சென்றடைந்தார். அங்கு பிச்சைப்பாத்திரம் ஏந்திய (கபாலம்) பிச்சாடனருக்கு மகாலட்சுமி பிட்சையளித்த கனமே பிரம்ம கபாலம் மறைந்து சிவனின் தோசம் விலகியது. கபாலம் ஏந்தியதால் சிவன் கபாலி என்றும் அழைக்கப்படுகிறார்[3].

**சாத்திரச் சான்றுகள்**

பிச்சாடனரின் படிமக்கலை கூறுகள் காசியப சிற்பசாத்திரம், சகளாதிகாரம், ஸ்ரீதத்துவநிதி, அம்சுமத்பேதாகமம், காமிகம், காரணாகமம், சிற்பரத்தினம் ஆகியவற்றுள் விளக்கப்பட்டுள்ளன. அம்சுமத்பேதாகமம் பிச்சாடனரைப் பிரம்மனையும் விஸ்வக்சேனரையும் (திருமால் அம்சம்) கொன்றவர் எனக் குறிப்பிடுகிறது[4].

**பிச்சாடனர் தத்துவம்**

பிரம்மனது மண்டையோட்டைக் கையிலேந்தி, முனிவர்களின் இல்லந்தோறும் பிச்சை ஏற்கும் பிச்சாடனர் வெண்ணிறமாகவும், இடையில் அரைஞாண் இல்லாமலும் பாம்புகளை அணிந்தும், பூணூல் பூண்டு கண்டங்கறுத்தும் நெற்றியில் நீறு அணிந்தும் எல்லா உயிர்களையும் கவர்ந்திழுக்கும் வண்ணம் உலா வருவார். ஆணவம், கன்மம், மாயைக்கு ஆட்பட்ட ஆன்மாக்களுக்கு அவற்றை அகற்றுவார். தான் பரம்பொருள் என்பதை உணர்த்தி அவர்களது பாவத்தைக் கபாலத்தில் பலியாக ஏற்று உயிர்களை உய்விப்பார் என்னும் உன்னதத் தத்துவத்தை பிச்சாடனர் மூர்த்தம் உணர்த்துகிறது.

**கோயில் கோபுர வாயிலில் பிச்சாடனர்**

கிழக்குக் கோபுர வாயிலின் இருபுறமும் விஜய நகர கலையழகில் கொடிப்பெண் சிற்பங்கள் அமைந்துள்ளன். மேலே எழும் கொடிகளுக்கு இடையில் பிச்சாடனர் சிற்பம் உள்ளது. தென்திசைப் பார்த்தவாறு வட்ட வடிவில் உள்ள இலைக்கருகில் ஒன்றரை அடி உயரத்தில் இச்சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது. தலையில் வட்ட வடிவில் விரிந்துள்ள ஜடாபாரமும், நெற்றிக்கண்ணும் புன்முறுவல் பூக்கும் பரந்து விரிந்த எடுப்பான முகமும், வலச்செவியில் மகரகுண்டமும் இடச்செவியில் பத்ர குண்டலமும் தோள்களில் தோள் வளைகளும் கழுத்தில் மணிவடம், கண்டசரம், மார்பில் முத்துவடம் முதலியவை அணிகலன்களாக விளங்குகின்றன. முன்கையில் கைவளைகளும் இடையிலிருந்து தொடைவரை வரும் பாம்பு அரைஞாணும் இட முழங்கால் மேல் கிண்கிணியும் கால்களில் கழல்களும் பாதத்தில் பாதசரமும் அணிசெய்கின்றன.

கிழக்குக் கோபுர வாயிலின் வடக்கு நோக்கிய கொடிப்பெண் தலையிலிருந்து மேலேயெழும் கொடிக்கருகில் அமைந்துள்ள பிச்சாடனர் சிற்பத்தின் தலையில் வாலா மகுடமும் நீள் செவிகளும் கழுத்தில் கண்ட சரமும் அட்டிகையும் கபாலமாலையும் தோள்வளைகளும் கைவளைகளும் இடையில் கச்சையும் கடிபந்தமும் முழங்கால் வழியே தலைமாலையுமாகக் காட்சியளிக்கிறது. குள்ள பூதத்தின் காதில் வட்ட குண்டலங்களும் தொடைவரை உள்ள ஆடையும் காணப்படுகிறது. பூதகணத்தின்

இடக்கை தலைமேல் பிச்சை பாத்திரம் தாங்குகிறது. வலக்கை ஊரு ஹஸ்தத்துடன் அமைந்துள்ளது. வலப்புறம் மான் துள்ளும் நிலையிலும் மேல் இடக்கை திரிசூலம் ஏந்தியும் மேல் வலக்கை உடுக்கையுடனும் கீழ்வலக்கை மானுக்குத் தளிர் கொடுக்கும் நிலையிலும் காட்சியளிக்கிறது.

இச்சிற்பங்கள் கி.பி.16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. கொடிப்பெண் சிற்பங்கள் விசயநகர கால ஆலயங்களில் கோபுர வாயில்களின் இருபுறமும் காணப்படும். ஆகவே கொடிக்கருகே உள்ள பிச்சாடனர் சிற்பங்கள் 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என உறுதியாகக் கூறலாம்[5].

**மண்டபங்களில் பிச்சாடனர்**

**ஆயிரங்கால் மண்டபம்**

ஆயிரங்கால் மண்டபத்தில் கிழக்குத் திசையை நோக்கியவாறு புடைப்புச் சிற்பமாகக் காட்சி தரும் பிட்சாடனர் சிற்பம் இடக்காலை ஊன்றி வலது காலை எடுத்து நடக்கும் பாவத்தில் உள்ளது. இதன் உயரம் சுமார் ஓர் அடியாகவும் காலம் 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகவும் இருக்கின்றது. சிற்பத்தின் தலையில் ஜடாபாரமும். செவியில் வட்ட குண்டலங்களும் கழுத்தில் கண்டசரமும் மணிவடமும், தோள்களில் தோள் வளைகளும் இடையிலிருந்து தொடை வரை நீண்ட நாகமும் பாதத்தில் பாதசரமும் காணப்படுகின்றன. மேற்கு நோக்கிய பிச்சாடனர் சிற்பத்தில் தலையில் ஜடாபாரமும் நெற்றியில் நெற்றிப்பட்டமும் கழுத்தில் கண்டசரம். மணிவடம் ஆகியவையும் மார்பின் குறுக்கே பூணூலும் உதரபந்தமும், மேல் வலக்கை உடுக்கை ஏந்தியும் கீழ் வலக்கை தாழ்ந்தும் மானுக்குத் தளிர் கொடுக்கும் வகையிலும், கீழ் இடக்கரம் கபாலம் ஏந்தியும் காணப்படுகிறது. முகம் வசீகரத்துடன் அரசனை ஒத்த நேர் பார்வையுடனும் பிச்சாடனர் தோற்றம் காட்சி தருகிறது.

தெற்கு நோக்கியவாறு உள்ள பிச்சாடனர் சிற்பம், முனிபத்தினியின் கையால் பிச்சைப் பாத்திரத்தில் அன்னம் வாங்கிய நிலையில் காணப்படுகிறது. தஞ்சை பிரகதீசுவரர் கோயில், கங்கை கொண்ட சோழபுரம் , தாராபுரம் ஐராவதீசுவரர் கோவில்களில் முனிபத்தினிகள் கரண்டியுடன் பிச்சையிடும் கோலத்தில் பிச்சாடனருக்கு அருகில் வடிக்கப்பட்டுள்ளனர். அதன் தொடர்ச்சியை விசய நகர கால சிற்பங்களிலும் காணமுடிகிறது. தாருகாவனத்து முனிபத்தினி தலையில் இடப்புறம் சரிந்த கொண்டையுடனும் காதில் வட்டக் குழைகளுடனும் கழுத்தில் கண்டசரம், மணிவடம், முத்துவடம் ஆகிய அணிகலன்களுடன் காணப்படுகிறாள். மார்பில் கச்சை இல்லை. இடையின் ஆடை நழுவி முழங்கால் வரை வருகின்றது. அவளின் வலக்கை கரண்டியால் அன்னத்தைப் பிச்சைப்பாத்திரத்தில் இடுகிறது. இடக்கை தொடையின் மேல் உள்ளது. இந்தக் குழுவில் உள்ள பிச்சாடனர், சிவகணம், மான் மற்றும் முனிபத்தினி ஆகிய அனைத்தும் ஒரே கல்லில் காணக்கிடக்கும் அரிய சிற்பமாகும்.

**நாலுகால் மண்டபம்**

நாலுகால் மண்டபத்தில் கிழக்கு நோக்கிய பிச்சாடனர் சிற்பம் சுமார் மூன்று அடியில் அமைக்கப்பட்டுள்ளது. ஏனைய பிச்சாடனர் உருவங்களைப் போன்றே இது வடிக்கப்பட்டுள்ளது. இப்பெருமான் இடக்காலை ஊன்றி வலக்காலைப் பக்கவாட்டில் மடித்து கால்களில் பாதுகையோடு நடக்கும் கோலத்தில் உள்ளார். மேல் வலக்கரம் சிறிய உடுக்கையுடனும் மேல் இடக்கரம் நீண்ட திரிசசூலத்தண்டை பின்தோளில் சாற்றியுள்ளவாறும் காணப்படுகிறார்.

இந்தத் தூணின் மறுபக்கத்தில் உள்ள முனிபத்தினி கால்களைப் பக்கவாட்டில் திரும்பி ஆடையின்றி நிற்கும் கோலத்தில் இருக்கிறாள். வலப்புறம் சரிந்த கொண்டையும் தொய்யகத்துடன் கூடிய வாகுச்சுட்டியும் முத்துப்பட்டமும் தலையை அழகு செய்கின்றன. காதுகளில் புஷ்ப குண்டலங்களும் கழுத்தில் கண்டாபரணம் , மணிவடம் ஆகியவையும் தோள்களில் தோள்வளைகளும் முன்கையில் கைவளையல்களும் தொடையில் தொடைமாலையும், கால்களில் தண்டையும் பாதத்தில் பாத சரமும் அணிசெய்கின்றன. புஷ்ப குண்டலம், தொடைமாலை ஆகிய ஆபரணங்கள் விஜய நகர ஆபரணங்களாக மிளிர்கின்றன.

**பிறமண்டபங்களில் பிச்சாடனார்**

நந்தி மண்டபத்தூணில் வடக்குத்திசை பார்த்தவாறு அமைந்துள்ள பிச்சாடனர் உருவம் சற்று வித்தியாசமாக உள்ளது. தலையில் உள்ள கிரீடம் திருமாலின் தலையில் உள்ள கிரீடம் போன்று உயர்ந்த ஜடாமகுடமாக இருக்கிறது. நெற்றியில் நெற்றிப்படமும் செவிகளில் குண்டலங்களும் கழுத்தில் கண்டசரமும் முன்கைகளில் கைவளைகளும், தோள்களில் தோள்வளைகளும் மார்பில் பதக்கம் கோர்த்த மணிவடமும், இடையில் நாகவடிவில் அரைஞாணும் பாதங்களில் பாதசரங்களும் பாதுகைகளும் அணிந்து எழிலுடன் காணப்படுகிறது.

தியானமண்டபத்தின் வடகிழக்குத் தூணில் உள்ள பிட்சாடனர் சிற்பம் ஓர் அரிய வகையாகும். முனிவர்கள் கைகளைத் தலைக்கு மேல் தூக்கி வணங்கி நிற்கும் காட்சி பிட்சாடனர் தான் பரம்பொருள் என்ற உண்மைக் கருத்தை உணர்ந்து வணங்குவதாக இங்கு முனிவர்கள் காட்டப்பட்டுள்ளனர்.

யானைகட்டி மண்டபத்தில் தெற்குப் பார்த்த நிலையில் உள்ள பிச்சாடனர் கரங்களில் கபாலமும் தமருகமும் காணப்படுகின்றன. ஒலி எழுப்பி இசைபாடும் வண்ணம் உள்ள இச்சிலை முனிபத்தினிகளை இசையால் கவர்ந்திழுக்கும் முகமாக வழங்கப் பட்டுள்ளது.

**பிச்சாடனரின் சிறப்பும் பெருமையும்**

மாணிக்கவாசகப் பெருமான், எங்கள் சிவபெருமானைக் கூத்தாடி என்றும் பிச்சை எடுப்பவன் என்றும் எளிதாகக் கருதிவிடாதீர்கள். வேதங்களே தன்னை அறிய ஏத்திப் போற்றும் மாட்சிமை மிக்கன் எனப் போற்றுகிறார்.

**“அம்பலத்தே கூத்தாடி அமுதுசெயப் பலிதிரியும்**
**நம்பனையும் தேவனென்று நண்ணுமது என்னேடி**
**நம்பனையும் ஆமாகேள் நான்மறைகள் தாமறியா**
**எம்பெருமான் ஈசாஎன்று ஏத்தினகாண் சாழலோ”**[6]

இறைவனாகிய சிவபெருமான் தன்னுடைய எளிமைத்தன்மை இனிது விளங்கும் நிலையே பிச்சாடனர் மூர்த்தமாகும். பிச்சாடனப் பெருமானார் நம்மிடம் பொருளும் பொன்னும் கேட்கவில்லை. நம்முடைய அன்பையும் நன்றியையும் அவர்பெற விரும்புகிறார்.

**“வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ**
**வள்ளற் பிரானுக்கு வாய்த்தமலர் எதுவோ**
**வெள்ளைநிற மல்லியுமல்ல வேறெந்த மலருமல்ல**

**உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது"**[7]

என விபுலானந்தர் பாடுவதுபோல நம்முடைய உள்ளம் ஒன்றையே இறைவன் பெற விரும்புகிறார். இறைவன் இரந்துண்ணும் கோலத்தில் இருந்து அவனுக்கு நாம் ஈயப்பெறும் வாய்ப்பை நமக்கு அவன் உண்டாக்கிக் கொடுத்து அதன் வாயிலாக நாம் அவனுடைய எட்டாத திருவடிகளை எட்டிப்பிடித்துக் கொள்ளும்படி இன்னருள் புரிகின்றான் என்பதைத் திருமூலர்,

**"பரந்துல கேழும் படைத்த பிரானை**

**இரந்துண்ணி என்பார்கள் எற்றுக்கு இரக்கும்**

**நிரந்தரமாக நினையும் அடியார்**

**இரந்துண்டு தன்கழல் எட்டச் செய்தானே"**[8]

எனப் பாடியமை ஈண்டு சுட்டத்தக்கது.

**முடிவுரை**

இறைவனை மறந்து தங்கள் தவமே முதன்மையானது என்று கருதி இறைவனையே விலக்கியவர்களுக்குக் கற்பிக்கப்பட்ட பாடமே பிச்சாடனர் திருக்கோலமாகும். சோழர் காலத்தில் பிச்சாடனர் சிற்பங்களில் எளிமையும் அழகும் அதன்வழி தத்துவங்களும் முதன்மைப்படுத்தப்பட்டன. ஆனால் பிற்காலச் சிற்பங்களில் மனிதனின் ஆசைகள் மற்றும் வக்கிர எண்ணங்களின் வெளிப்பாடாக உருவம் கொண்டு கலைக்கு முக்கியத்துவம் தராமல் கலை என்ற பெயரில் விவரமாக இவ்வுருவங்கள் காட்டப்பட்டிருப்பது கலையில் கலந்த மாசு என கருதத் தோன்றுகிறது. எனினும் பிச்சாடனர் மூர்த்தத்தின் எளிமை மற்றும் பெருமையை மனத்தில் நிறுத்தி விருப்பு வெறுப்பற்ற பேரின்ப நிலைக்கு மனித குலத்தை வழிநடத்திச் செல்பவராக அவரை நாம் உணரலாம்.

**சான்றெண் விளக்கம்**

1. வரலாற்றில் திருவண்ணாமலை, த.ம.பிரகாஷ், ப.456
2. லிங்கபுராணம், சண்முகசுந்தரமுதலியார் (உ.ஆ.), ப.162
3. கூர்மபுராணம், சண்முகசுந்தரமுதலியார் (உ.ஆ.), ப.312
4. படிமக்கலை - கட்டுரைகள், அ.இலதா, ப.86
5. வரலாற்றில் திருவண்ணாமலை, த.ம.பிரகாஷ், ப.462
6. திருவாசகம், திருச்சாழல், பா.எண்.271
7. விபுலானந்தர் பாடல் தொகுப்பு, ப.86
8. திருமந்திரம், கனகசபை (உ.ஆ.), ப.264

**துணைநூற்பட்டியல்**

1. இலதா.அ, படிமக்கலை – கட்டுரைகள், பூமொழி பதிப்பகம், சென்னை-117, முதற்பதிப்பு, 2017
2. கனகசபை.பெ. (உ.ஆ.), திருமந்திரம், சரவணன் பதிப்பகம், சென்னை-21, 1979
3. சண்முகசுந்தரமுதலியார்.கி, இலிங்கபுராணம், இலக்குமி பதிப்பகம், சென்னை-42, முதற்பதிப்பு 1921.

4. சண்முகசுந்தரமுதலியார்.கி, கூர்மபுராணம், இலக்குமி பதிப்பகம், சென்னை-42, முதற்பதிப்பு 1921.
5. பிரகாஷ்.த.ம. (தொ.ஆ.), வரலாற்றில் திருவண்ணாமலை, மணிமொழி பதிப்பகம், திருவண்ணாமலை, 2014.